**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO.28/2021**

| | |
|---|---|
| Name: **ராயப்பன்** | Caste: |
| Father's Name: **ஸ்தனிஷ்லாஸ்**<br>Husband Name : | Calling: |
| Village:. | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tmt.L.Meerabai, Gr.III, BC and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 22.01.2026 | |

**<u>22.01.2026</u>**

**வா.சா.2 – 1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியும். இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்து உள்ளீர் என்றால் ஜோஸ், தீபா, லாரன்ஸ் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி மலையராஜ் என்னுடைய சகோதரர் ஆவார். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் 355/37 ஆகும். தாவா சொத்தின் தெற்கு பக்கத்தில் நீரடி எல்லை உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கத்தில் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து குறித்த ஆவணங்கள் ஏதேனும் நான் பார்த்துள்ளேன் என்றால் ஆவணத்தை பார்த்துள்ளேன். அந்த ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் எங்களுடைய தாத்தா மரிய சூசை பெயரில் உள்ளது. எங்கள் தாத்தா மரிய சூசைக்கு ஞானபிரகாஷ் அம்மாள், ஆரோக்கியசாமி, தனிஷ் லாஸ், லூர்து மேரி ஆகிய வாரிசுகள் உள்ளார்கள். தனிஷ்லாஸ் என்னுடைய தகப்பனார் ஆவார். என் உடன் பிறந்தவர்கள் மரிய செல்வி, மலைராஜ், ஞானகுமார், மற்றும் ரெக்சிபுளோ. நான் வீடு கட்டி குடியிருந்து வரும் வீட்டிற்கு மரியசூசையின் வாரிசுகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வீட்டின் ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் அது யார் பெயரிலும் இல்லை, பட்டா வழங்கப்பட்ட இடமாகும். ரோடு ஒட்டி ஆனந்த் வீடு கட்டியுள்ள அதற்கு பின்பு ஜோஸ் வீடு கட்டியுள்ள அதற்கு பின்பு வாதி மலையராஜ் வீடு கட்டியுள்ளார்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 தான் நான் தாவா சொத்து குறித்து பார்த்த ஆவணமா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. என் தாத்தா யாரிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்பட்ட ஆவணம் சர்வே எண் 355/37 என்ற சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மலையராஜுக்கும் ஜோஸ் தாவா சொத்து குறித்து சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த பஞ்சாயத்து குறித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

சர்வே எண் 37 சப்டிவிஷனில் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ஞானபிரகாசம்மாள் பெயரில் உள்ளது. ஞானபிரகாஷ் அம்மாவின் வாரிசுகள் தான் எலிசபெத் ஜெசிந்தா மேரி மற்றும் லூசியா ஆவார்கள். ஜஸ்டிந்தா மேரியின் மகன் தான் ஒன்றாம் பிரதிவாதி ஜோஸ் என்றால் சரிதான். எலிசபெத்தின் மகன்தான் மூன்றாம் பிரதிவாதி லாரன்ஸ் என்றால் சரிதான். சர்வே எண் 355/36, 355/37, 355/38 எந்த காலத்திலும் என்னுடைய தந்தை அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களில் என்னுடைய தந்தை அனுபவத்தில் இருந்ததை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. சர்வே எண் 355/36, 355/37, 355/38 ஆகிய சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் சாட்சி மௌனமாக சிறிது நேரம் இருந்து விட்டு கேள்வியை திருப்பி கேட்கும் பொழுது தனக்கு பங்கு உள்ளதாக தெரிவிக்கிறார். நான் வீடு கட்டி குடியிருந்து வரும் இடத்தில் ஞான பிரகாஷ் அம்மாவின் வாரிசுகளுக்கு பங்கு உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 355/36, 355/37, 355/38 ஆகிய சொத்துக்கள் ஞானபிரகாசம்மாளுக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றாலும் என்னுடைய தந்தைக்கு அதில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

என்னுடைய சகோதரரான வாதி அவரது விசாரணையின் பொழுது நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு ஞான பிரகாஷ் அம்மாவின் வாரிசுகளுக்கும்

வாதிக்கும் உரிமை உள்ளதாக குறிப்பிட்டுள்ள விபரம் சரியா என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு என்னுடைய சகோதரர் வாதி உரிமை கோருவதற்கு முன்பாக நானும் அவரும் ஒரு ஏற்பாடு செய்து கொண்டு தற்பொழுது அவருக்காக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கட்டி உள்ள வீடு சட்டவிரோதமான ஆக்கிரமிப்பு என்றாலும் அதனை வாதி பிரதிவாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. பொதுவாக ஒரு சொத்திற்கு பட்டா இருந்தால் மட்டுமே உரிமை கோர முடியும் என்றால் சரிதான்.

சர்வே சப் டிவிஷன் 37 கிராம நத்தம் வகைப்பாட்டை சார்ந்தது. சர்வே சப் டிவிஷன் 36 வழியாகும். சர்வே எண் 355/36, 355/37, 355/38 ஆகிய சொத்துக்கள் ஞானபிரகாசம்மாளுக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றாலும் எனக்கும் என்னுடைய சகோதரருக்கும் அதில் உரிமை கிடையாது என்றாலும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**Selvi.R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**உத்திரமேரூர்.**